பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 28 திங்கட்கிழமை 12.01.2026 | அதிர்வு 166

## லொறி மோதி இளைஞர் பலி!

புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டவில்லுவ வீதியில் 6ஆவது மைல் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில், இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# கல்வி மறுசீரமைப்பைக் கைவிடு!! ஹரிணியே உடனே பதவி விலகு!!

## போராட்டத்தில் குதித்த விமல் அணி


இலங்கை அரசியலில் உண்ணாவிரதப் போராட்டத்துக்குப் பெயர் போன தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச இன்று காலை சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் தனது கட்சி சகாக்களுடன் திரண்டு வந்து அவர் போராட்டத்தில் குதித்துள்ளார். 02▶

### முந்தல் - நவத்தன்குளத்தில் கோர விபத்து

# கார் - வான் நேருக்கு நேர் மோதல்! இரு பெண்கள் உட்பட மூவர் சாவு!!

## 10 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை



புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் முந்தல், நவத்தன்குளம் பகுதியில் இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற கோர விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காரும் வானும் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

புத்தளம் நோக்கிப் பயணித்த கார் ஒன்றும், எதிர்த் திசையில் வந்த வான் ஒன்றும் திடீரென கட்டுப்பாட்டை இழந்து ஒன்றுடன் ஒன்று 02▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கல்வி மறுசீரமைப்பை...**

புதிய கல்வி மறுசீரமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், கல்வி அமைச்ச ரான பிரதமர் கலாநிதி ஹறிணி அமர சூரிய உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

கல்வி அமைச்சரின் திட்டங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டவை எனவும், அவை நாட்டின் தேசிய கல்வி முறைமையைச் சீர்குலைக்கும் வகையில் அமைந் துள்ளன எனவும் போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளார்கள்.

“ஹறிணியின் தவறான கல்விச் சீர் திருத்தத்தை உடனடியாகத் திரும்பப் பெறு”, “பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பகடைக்காயாக்கும் கல்வி அமைச்சரே பதவியை விட்டு விலகு” போன்ற வாசகங் கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் தரையில் அமர்ந்து தமது எ திர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

குறிப்பாக, அமைச்சரை விமர்சிக் கும் வகையிலான கேலிச்சித்திரங்கள் மற்றும் “Harini Go Home” போன்ற வாசகங்கள் அடங்கிய பாரிய பதாகை களும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

கல்வித் துறையில் அரசு மேற்கொள் ளத் திட்டமிட்டுள்ள மாற்றங்கள் மாண வர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித் துள்ள போராட்டக்காரர்கள், இந்தச் சீர் திருத்தங்கள் உடனடியாக நிறுத்தப்படும் வரை தமது போராட்டங்கள் தொடரும் என்றும் எச்சரித்துள்ளார்கள்.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் காரணமாக கல்வி அமைச்சுக்கு முன்னா லுள்ள பகுதியில் பாதுகாப்பு பலப்படுத் தப்பட்டிருந்ததுடன், அந்தப் பகுதியின் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக் கப்பட்டிருந்தன










**கார் - வான்...**

மோதி விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தின்போது இரு வாகனங்களும் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

இந்த விபத்தில் காரில் பயணித்த இரண்டு பெண்களும், ஒரு ஆண் ஒரு வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந் துள்ளனர்.

மேலும், இந்த விபத்தில் காயமடைந்த 10 பேர் உடனடியாக மீட்கப்பட்டு சிகிச் சைகளுக்காக சிலாபம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு முந்தல் பொலிஸ ார் மற்றும் அவசர சேவைப் பிரிவினர் விரைந்து சென்று மீட்பு நடவடிக்கை களை மேற்கொண்டனர்.

விபத்து காரணமாக அந்தப் பகுதி யில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக் கப்பட்டதுடன், பின்னர் சீரமைக்கப்பட்டது.

இந்தக் கோர விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.

அதிவேகம் அல்லது கவனக்குறைவு விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதுடன், சம்பவம் குறித்து விரிவான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

**லொறி மோதி...**

6ஆவது மைல் பகுதியிலிருந்து அட்டவில்லுவ நோக்கிச் சென்ற மோட் டார் சைக்கிள் ஒன்று, எதிர்த் திசையில் வந்த லொறியுடன் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு இடம்பெற்ற இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிள் கடுமையாகச் சேதமடைந்துள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கி ளைச் செலுத்திச் சென்ற இளைஞர் பலத்த காயமடைந்த நிலையில் மீட் கப்பட்டு புத்தளம் வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார். எனினும், வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் தவல, அட்டவில் லுவ பகுதியைச் சேர்ந்த 30 வயது டைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்தைத் தொடர்ந்து, லொறியின் சாரதி வாகனத்தைச் சம்பவ இடத்திலேயே கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் சில நேரம் பதற்றமான சூழ்நிலை நிலவியது.

உயிரிழந்த இளைஞரின் சடலம் தற் போது புத்தளம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள் ளது.

விபத்துக்குக் காரணமான லொறி யின் சாரதியைக் கைது செய்வதற் கான மேலதிக விசாரணைகளைப் புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2029ஆம் ஆண்டு தேர்தலில் பொது வேட்பாளர் யார்?

## நாமல் எம்.பி. கருத்து



"அடுத்த ஜனாதிபதி தேர்தலின் போது பொதுவேட்பாளர் யார் என்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கப் படவில்லை."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்

"ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட எதிரணிகள் ஒன்றிணைந்துகூட்டணிஅமைத்தால்2029ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுவேட்பாளர் யார் என்பது தொடர்பில் சர்ச்சை ஏற்படாதா? அவ்வாறு எழும் பட்சத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும்." – என்று நாமல் ராஜபக்ஷ விடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அவர்,

"இது பற்றி 2029 ஆம் ஆண்டில் கதைப்போம். தற்போது விவாதிக்க வேண்டிய விடயம் அல்ல அது.

எதிரணிகள் ஒன்றிணைந்து வலுமான அரசியல் பயணத்தை முன்னெடுப்பது பற்றியே தற்போது அவதானம் செலுத் தப்பட்டுள்ளது." – என்றார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் ஒன்றிணைவதற்கு நாம் எம்.பி. மீண்டும் வரவேற்பு தெரிவித் தார்.

# விஜித ஹேரத்தை சந்தித்த வாங் யீ



உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டு இலங்கை வந்துள்ள சீன வெளி யுறவு அமைச்சர் வாங் யீ, வெளிவிவ கார அமைச்சர் விஜித ஹேரத்தை இன்று காலை சந்தித்துள்ளார்.

இதன்போது, விஜித ஹேரத் மற்றும் வாங் யீ இடையிலான இருதரப்பு பேச்சு நடைபெற்றுள்ளது.

டித்வா சூறாவளிக்குப் பின்னர் நாட் டின் மறுகட்டமைப்பு குறித்து மறுஆய்வு செய்வதும், சீன அரசால் வழங்கப்படும் உதவிகள் குறித்து அறிவிப்பதும் சீன வெளியுறவு அமைச்சரின் பயணத்தின் நோக்கமாகும்.

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி இன்று காலை உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கையை வந்த டைந்துள்ளார்.

அவருடன் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த 17 சிரேஷ்ட அதிகாரி கள் குழுவினரும் வருகை தந்துள்ளனர்.

# ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரமுன்னர் மக்களின் காணிகளை விடவேண்டும்

## வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன் வலியுறுத்து

யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க வருகை தருவதற்கு முன்னர், மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன்.

காணி விடுவிப்பு தொடர்பான அர சின் நடவடிக்கைகள் குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கை யில், மக்களின் நீண்டகால போராட் டங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் உடனடித் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அவரது முழுமையாக கருத்துகளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள காணொலியில் கேட்கலாம்.





# கெஹலியவுக்கு எதிரான வழக்கு பெப்ரவரி 13 வரை ஒத்திவைப்பு!

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவரது மகன் ரமித் ரம்புக்வெல, மகள் அமாலி நாயனிகா ரம்புக்வெல மற்றும் அவர்களது பணியாளரான நிபுணி கிருஷ்ணஜினா ஆகியோருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி மீண்டும் விசாரணை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹமட் மிஹால் முன்னிலையில் இந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது முன்வைக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்த நீதிபதி, வழக்கை அடுத்த மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கெஹலிய ரம்புக்வெல அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், தனது தனிப்பட்ட ஊழியர் குழாமில் வெளிநபர்களின் பெயர்களைப் பயன்படுத்தி, அவர்களுக்குரிய சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளைத் தனது சொந்த வங்கிக் கணக்குகளில் வைப்பிலிட்டதன் மூலம் ஊழல், மோசடி மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி பிரதிவாதிகளுக்கு ஏற்கனவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் தற்போது நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# 2 ஆயிரத்து 400 சிகரெட்டுகளுடன் வெளிநாட்டுப் பிரஜை சிக்கினார்!

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட 2 ஆயிரத்து 400 சிகரெட்டுகளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையப் பொலிஸ் அதிகாரிகள் குழுவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய இன்று அதிகாலை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 56 வயதுடைய இந்தியர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைவிமானநிலையப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அதிகாரக் குத்துக்கரணம்...!

எதிர்க்கட்சிகளின் வரிசையில் இருக்கின்ற சமயங்களில் உபதேசம் செய்வதும் பிதற்றுவதும் ஆட்சியைப் பிடிப்பதற்கான தந்திரங்களேயன்றி கொள்கை விளக்கமோ, கோட்பாட்டு நிலைப்பாடோ அல்ல. இதுதான் பொதுவாக பிரதான எதிர்க்கட்சிகளின் பண்பியல்பாக இருந்து வருகின்றது.

அதிலிருந்து தமது தரப்பும் வேறுபட்டது அல்ல என்பதை ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியும் நிரூபித்து வருகின்றது.

எதிரணியில் இருந்த போது கொள்கை நிலைப்பாடாக அது அறிவித்த பல விடயங்கள் இப்போது அதிகாரத்துக்கு வந்ததும் அத்தரப்பினால் காற்றில் பறக்க விடப்பட்டு விட்டன என்பது வெள்ளிடைமலை.

2023 அப்போதைய அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடிய தேசிய மக்கள் சக்தி இப்போது நாட்டின் பாதுகாப்பு தரப்பினரின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தானே அதனை ஒத்த சட்ட வரைவை 'பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்ட வரைவு' என்ற பெயரில் வெளியிட்டிருக்கின்றது. இதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

நாட்டில் கடந்த 47 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் மிகக் கொடூரமான - மிருகத்தனமான - காட்டுமிராண்டித்தனமான - பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும் என்று எதிரணியில் இருந்த போது தீவிரமாகக் குரல் கொடுத்த அநுரகுமார திஸநாயக்க உட்பட ஜே.வி.பியினர் முன்னைய சமயங்களில் அந்தச் சட்டத்துக்கு மாற்றீட்டுச் சட்டம் கூட கொண்டு வரப்படக்கூடாது என்று ஒற்றைக் காலில் நின்றவர்கள். இப்போது அந்தக் கொள்கை காற்றில் பறந்து விட்டது. மாற்றீட்டுச் சட்டம் பற்றி அவர்கள் அழுத்தமாகப் பேசுகிறார்கள். அதுவும் கூட முன்னர் அவர்கள் விமர்சித்த மோசமான மாற்றீட்டுச் சட்டங்களுக்கு ஒத்த சட்ட வரைவைத் தான் இப்போது அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். அவ்வளவு தூரத்துக்கு எதிரணியில் இருந்து அதிகாரத் தரப்புக்கு வந்ததும் அவர்களது கொள்கை நிலைப்பாடு தலைகுப்புறக் கவிழ்ந்து விட்டது.

நாட்டின் பொருளாதாரக் கொள்கை உட்பட பல்வேறு அடிப்படை விடயங்களில் எதிர்க்கட்சியில் இருந்தபோது அவர்கள் உபதேசித்த தத்துவங்களுக்கு மாறாகவும் அடிப்படைகளுக்கு வேறுபட்டும் இப்போது அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

ஒரு வருடத்துக்குள் மாகாண சபை தேர்தல் என்ற அவர்கள் இப்போது அந்த தேர்தலை பல வருடங்களுக்கு இழுத்தடிப்பதற்கான ஏற்பாடுகளோடு தயாராகி விட்டார்கள்.

எதிர்க்கட்சியில் இருந்தபோது உபதேசம் செய்தது 'ஊருக்கடி, உனக்கு அல்ல' என்ற நிலைப்பாட்டைத்தான் தொடர்ந்து ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்தி வருகின்றது.

எதிர்க்கட்சி வரிசைகளில் இருந்த போது அதன் நிலைப்பாடு வேறு. இப்போது ஆட்சி அதிகாரத்துக்கு வந்ததும் அந்த நிலைப்பாடுகளுக்கு மாறாக தலைகீழாக அது எடுக்கும் போக்கு வேறு. இதுதான் அதிகாரக் குத்துக்கரணம்...!

# மாலைதீவு தூதர் மசூட் இமாட் ஆதம்பாவா எம்.பியுடன் சந்திப்பு






(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கைக்கான மாலைதீவு தூதர் மசூட் இமாட் டுடன் அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவா சனிக்கிழமை சிநேகபூர்வ சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

கொழும்பு மெல்போர்ன் அவனியிலுள்ள தூதரின் வாசஸ்தலத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது. டித்வா பேரனர்த்தத்தின் போது மாலைதீவு நாட்டின் நிதிப்பங்களிப்புக்காக நாடாளுமன்ற உறுப்பினர் நன்றி தெரிவித்தார்.

இதன் போது வைத்தியரும் பிரபல தொழிலதிபருமான டாக்டர் றிஸான் ஜெமீல் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர் எஸ். இம்தியாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# பிளாஸ்டிக் அரக்கன்: அழியும் இயற்கை விழிக்குமா மனித இனம்?

**பவதாரணி குலேந்திரநாதன்,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

நவீன உலகின் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக பிளாஸ்டிக் மாறிவிட்டது. காலையில் பல் துலக்கும் பிரஷ் முதல் இரவு பயன்படுத்தும் மின்விளக்கு வரை பிளாஸ்டிக் நீக்கமற நிறைந்துள்ளது. ஆனால், இந்த “மலிவான மற்றும் எளிமையான” கண்டுபிடிப்பு இன்று பூமியை விழுங்கும் ஒரு அரக்கனாக உருவெடுத்துள்ளது.

மனித வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் பிளாஸ்டிக் வேரூன்றி விட்டது. உணவுப் பொட்டலங்கள், குடி தண்ணீர் போத்தல்கள், கடைகளில் வழங்கப்படும் பைகள், விளம்பரப் பொருட்கள் என அனைத்திலும் இதன் தாக்கம் அதிகரித்துள்ளது.

இந்தப் பிளாஸ்டிக் கடலில், ஆறுகளில், நிலத்தில் கூட சேர்ந்து, தாவரங்கள், விலங்குகள், மற்றும் மனிதர்களின் வாழ்வை ஆபத்துக்குள்ளாக்குகின்றது.

கடல் விலங்குகள் பிளாஸ்டிக்கை விழுங்கி உயிரிழக்கின்றன. நிலத்தில் சேரும் பிளாஸ்டிக், இயற்கை உரம் மற்றும் நிலத்தின் வளத்தை கெடுத்து மண்ணை பாழாக்குகின்றது.

ஒரு மெதுவான நஞ்சு!

பிளாஸ்டிக் என்பது எளிதில் மக்காத ஒரு பொருள். ஒரு பிளாஸ்டிக் பாட்டில் மக்குவதற்கு சுமார் 450 முதல் 500 ஆண்டுகள்வரை தேவையாகும். நாம் ஒருமுறை பயன்படுத்திவிட்டு எறியும் பைகள் மற்றும் பானக் குழாய்கள் பல நூற்றாண்டுகளுக்கு மண்ணிலும் நீரிலும் தங்கி நஞ்சாக மாறுகின்றன. இதனால் இயற்கை அழிவடைவதுடன் சுற்றுச்சூழலும் பாதிப்படைகின்றது.

பிளாஸ்டிக் அரக்கன் இயற்கையை எவ்வாறு சிதைக்கிறான் என்பதைப் பின்வரும் நிலைகளில் காணலாம்.

மூ நிலம் பாதிப்பு: மண்ணில் கலக்கும் பிளாஸ்டிக் துகள்கள் நிலத்தடி நீர் மட்டத்தைப் பாதிப்படையச் செய்கின்றன. மண்ணின் செழுமையைக் குறைத்து, விவசாயத்தைப் பொய்க்கச் செய்கின்றன.

மூ நீர்நிலைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள்: ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான பிளாஸ்டிக் கடலில் கொட்டப்படுகிறது. இதை உணவென்று நினைத்து உண்ணும் திமிங்கலங்கள், ஆமைகள் மற்றும் மீன்கள் பரிதாபமாக உயிரிழக்கின்றன.

மூ காற்று மாசுபாடு: பிளாஸ்டிக் கழிவுகளை எரிப்பதால் வெளிவரும் ‘டையாக்சின்’ போன்ற நச்சுப் புகை ஓசோன் படலத்தைப் பாதிப்படையச் செய்வதுடன் மனிதர்களுக்குச் சுவாசக் கோளாறுகளை உண்டாக்குகின்றன.

தொடர்ச்சி▼

# பிளாஸ்டிக் அரக்கன்: அழியும் இயற்கை விழிக்குமா மனித இனம்?

தொடர்ச்சி▲

**மைக்ரோ பிளாஸ்டிக் கண்ணுக்குத் தெரியாத எதிரி**

பிளாஸ்டிக் சிதையும்போது அது சிறிய துகள்களாக (Micro plastics) மாறுகிறது. இவை நாம் குடிக்கும் தண்ணீர், உண்ணும் மீன் மற்றும் சுவாசிக்கும் காற்றில் கூட கலந்து விடுகின்றன. சமீபத்திய ஆய்வுகளில் மனிதனின் இரத்தத்திலும், தாய்ப்பாலிலும் கூட பிளாஸ்டிக் துகள்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது மனித இனத்துக்கு விடுக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய எச்சரிக்கை மணியாகும்.

**மனித இனம் விழிக்குமா? தீர்வு நம் கையில்**

இயற்கையை மீட்டெடுக்க நாம் இப்போது இருந்தே செயல்பட வேண்டும்.

1. நெகிழித் தடையை மதித்தல்: அரசு விதித்துள்ள பிளாஸ்டிக் தடையை வெறும் சட்டமாகப் பார்க்காமல், நம் கடமையாகக் கருதிப் பின்பற்ற வேண்டும்.

2. மாற்றுப் பொருட்கள்: பிளாஸ்டிக் பைகளுக்குப் பதில் துணிப்பைகளையும், பிளாஸ்டிக் போத்தல்களுக்குப் பதில் செம்பு அல்லது எஃகு (Steel) போத்தல்களையும் பயன்படுத்தலாம்.

3. கொள்கை: குறைத்தல்

**பயன்பாட்டைக் குறைத்தல்**

* மீண்டும் பயன்படுத்துதல் (Reuse): ஒரு பொருளைத் தூக்கி எறியாமல் மீண்டும் உபயோகித்தல்.

• மீள் சுழற்சி (Recycle): கழிவுகளை முறையாக மீள்சுழற்சிக்கு அனுப்புதல்.

பிளாஸ்டிக் என்பது நம் வசதிக்கான ஆயுதமல்ல, நம் எதிர்காலத்துக்கு விடப்படுகின்ற நச்சுப் புகை போன்றது. "நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பிளாஸ்டிக் துண்டும், இயற்கையின் கழுத்தை இறுக்கும் கயிறு" என்பதை உணர்வோம். இன்று விழிக்கவில்லை என்றால், நாளை அழிவை தவிர்க்க முடியாது. இயற்கை நமக்கு அன்னை போன்றது. அன்னையை அழித்து விட்டு எந்த உயிரினமும் வாழ முடியாது. "பிளாஸ்டிக் அரக்கன்" தானாக உருவாகவில்லை நமது அலட்சியத்தால் நாமே உருவாக்கியதுதான். இன்னும் காலம் கடந்துவிடவில்லை. வரும் தலைமுறைக்கு நஞ்சில்லாத நிலத்தையும், பிளாஸ்டிக் இல்லாத கடலையும் விட்டுச் செல்வது நமது தலையாய கடமையாகும்.

**"பிளாஸ்டிக் தவிர்ப்போம்! புவி காப்போம்!"**

# காரைதீவில் விளையாட்டு வீரர்கள் கடற்கரையைச் சுத்தம் செய்தனர்



**( வீ.ரி.சகாதேவராஜா)**

காரைதீவு விளையாட்டுக் கழகத்தினர் "பீச் கிளீன் அப் கம்பெயின்" (Beach clean up campaign) என்னும் தொனிப்பொருளில் சிரமதானத்தை மேற்கொண்டு காரைதீவு கடற்கரையைச் சுத்தப்படுத்தினர்.

நடப்பு ஆண்டுக்கு உரிய கழகத் தலைவர்முன்னாள்தவிசாளர்வை.கோபிகாந்த் தலைமையில் இந்த சுத்தப் படுத்தும் சிரமதானம் சுயமாக முன்வந்த கழக வீரர்களால் முன்னெடுக்கப்பட்டது.

நீண்ட காலமாக கவனிப்பாரின்றிக் குவிந்து கிடந்த பிளாஸ்டிக் பாத்திரங்கள் மற்றும் குப்பைகளை இந்த இளைஞர்கள் அகற்றி சுத்தப்படுத்தினர்.

கிளின் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித் திட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாகவும் விளையாட்டு கழகத்தின் வருட ஆரம்ப செயற்பாடாகவும் இது இடம் பெற்றது என கழகச் செயலாளர் ரி.பிரகிலன் தெரிவித்தார்.

# கரையோர சட்டவிரோத தொழில்களை நிறுத்தினால் வாழ்வாதாரத்தில் உயரலாம்

## ஆறுமுகம் சிவனேஸ்வரன் தெரிவிப்பு

(பா.சதீசன்)

நாயாறு தொடங்கி எல்லா கரையோரங்களிலும் சுருக்குவலை, லைற்கோஸ், டைனமிட் தொழில்களையும் ஒட்டு மொத்தமாக நிறுத்தினால் எம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூடியதாக இருக்கும் என்று முள்ளிவாய்க்கால் மேற்கு வளர்மதி கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் ஆறுமுகம் சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பு ஒன்றினை மேற்கொண்ட நிலையில் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மேற்கு பகுதிகளில் கரைவலை இயந்திரங்கள் தொடர்பான பிரச்சினை உள்ளது. அந்தவகையில் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தைப் பொறுத்தவரை 9 கரைவலை இயந்திரங்கள் கொண்டு தென்னிலங்கையினர் தொழில் செய்கின்றனர்.

அந்தவகையில் கரைவலை இயந்திர செயற்பாட்டை இலங்கை முழுவதும் நிறுத்த வேண்டும். முள்ளிவாய்கால் மேற்கு கிராமத்தைப் பொறுத்தவரை கரைவலை செயற்பாட்டில் ஈடுபடும் இயந்திரத்தை நிறுத்தாவிடில் முள்ளிவாய்க்கால் மேற்கு வளர்மதி சங்கம் சார்ந்தவர்களும், கிராம மக்களும் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். அநதவகையில் அரசு இதற்கான ஒரு தீர்வை வழங்க வேண்டும்.

கடந்த 15 வருடங்களாக இந்திய இழுவை மடிப் படகுகள் வந்து, எம் கண்ணுக்கு எட்டும் தூரத்தில் மீன், றால் முட்டையிடும் பகுதியில் மண்ணுக்கு கீழால் ஈயத்தை இழுத்து மீன், றால் முட்டைகளைக் கரைக்கும் கொடூரச் செயலில் ஈடுபடுகின்றன.

உண்மையில் இந்திய, இலங்கை அரசுகள் கலந்துரையாடி இந்திய இழுவை படகுகளை நிறுத்தி எமக்கு ஒத்தாசை வழங்க வேண்டும்.



நாயாறு தொடங்கி எல்லா கரையோரங்களிலும் சுருக்குவலை, லைற்கோஸ், டைனமிட் தொழில்களையும் ஒட்டுமொத்தமாக நிறுத்தினால் எம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கூடியதாக இருக்கும்.

மழைகாலமான மூன்றுமாத காலம், மீனவர்கள் கடலுக்குள் இறங்க வேண்டாம் என அறிவுறுத்தல் வழங்குவதுடன் இந்தநேரத்தில் அரச நிவாரணமும், மீனவர்களுக்கு உரிய ஓய்வூதியமும் வழங்க வேண்டும். இதனை எம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கதைத்து எமக்கு வருடா வருடம் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடற்றொழிலுக்குப் பொறுப்பான திணைக்களங்கள் ஆய்வுகளைச் செய்து அந்தந்த சங்கங்களுக்கு இஞ்சின், வலைகளைப் பாதுகாப்பாக வைக்ககூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்து தருதல் வேண்டும்.

நீண்ட காலமாக சாலை, இரட்டைவாய்க்கால், நந்திக்கடல் சேறு எடுப்பது தொடர்பாக ஒவ்வொரு கூட்டத்திலும் கதைக்கப்படுகின்றது. இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. நந்திக்கடல் உண்மையில் சிறந்த வளம் கொண்டது ஆனால் சேறு கூடுதலாக இருப்பதால் இறால், மீன் உற்பத்தி குறைவாக உள்ளது. இந்த அரசு நல்ல செயல்களை செய்ய வேண்டும். இந்த நான்கு வருட ஆட்சிக்குள் சாலை, இரட்டைவாய்க்கால், நந்திக்கடல், சிறு கடலை ஆழப்படுத்தி சேறுகளை அள்ளி எமது வாழ்வாதாரத்துக்கு வழிவகை செய்ய வேண்டும்.

யுத்தத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் பழுதடைந்த, பாவனையில் உள்ள படகுகள் சமாசத்தில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு வைக்கப்பட்ட படகுகளை ஏலத்தில் விடுமாறு அல்லது சங்கங்களுக்கு கையளிக்குமாறு ஒவ்வொரு கூட்டங்களிலும் கூறும்போது மீன்பிடி திணைக்களத்தால் வழங்கப்படும் பதிவிலக்கம் தேவை என்று சமாசத்தினர் கூறுகின்றார்கள். இவ்வாறான பிரச்சினைகளைச் சீர் செய்து மீனவர்களது சீரான வாழ்வுக்கு வழிவகை செய்ய வேண்டும்.– என்றார்.

# தங்கநகர் பகுதி மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கல்





மூதூர், கட்டப்பறிச்சான், தங்கநகர் பகுதியிலுள்ள தரம் 1 முதல் தரம் 13 வரை கல்வி பயின்றுவரும் 216 மாணவர்களுக்கு, 2026 ஆம் ஆண்டு கல்வியை முன்னெடுக்கத் தேவையான அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச இந்து மத பீடத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் ஸ்ரீ ஆதி கருமாரி அம்மன் ஆலய ஸ்தாபகரும், அருள் வாக்கு சித்தருமான ச. அன்டனி ஜயாவின் ஒருங்கிணைப்பில் தங்கநகர் ஆர்.டி.எஸ். தலைவர் ரபிசனனின் வேண்டுகோளுக்கிணங்க இவை வழங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ கணேசா வித்தியாலய வளாகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.




# மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வுகள் செங்கலடியில்!



**(பழுவூரான்)**

ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசத்தைச் சேர்ந்த "ஏர் முனை மாற்றுத்திறனாளிகள் அமைப்பு" நடத்திய சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வு, செங்கலடி வந்தாறுமூலை கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்றது.

சமூகத்தில் மாற்றுத் திறனாளிகளின் திறமைகளை அங்கீகரிக்கும் விதமாக இந்த விழா அமைந்திருந்தது.

அமைப்பின் தலைவர் க. கயிலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாற்றுத் திறனாளிகளின் கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன.

அத்துடன், அவர்களால் உருவாக்கப் பட்ட கைத்தொழில் தயாரிப்புகளின் கண்காட்சியும் இடம்பெற்றன. உடல் ரீதியான சவால்களைத் தாண்டி, அவர்கள் உற்பத்தி செய்த பொருள்கள் அவர்களின் தன்னம்பிக்கையை பறைசாற்றுவதாக அமைந்தன.

நிகழ்வின் முக்கிய அங்கமாக, பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான சிறந்த மாணவர்கள், வெற்றிகரமான கைத்தொழில் முயற்சியாளர்கள், கலை நிகழ்ச்சிகளில் சிறப்பித்த கலைஞர்கள், ஏர் முனை மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த தன்னார்வலர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் அரச அதிகாரிகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரம், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. திலக்சினி சசிதரன், பிரதேச சபை தவிசாளர் எம். முரளிதரன், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். அருள்மொழி, பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர்களான திருமதி. கோணேஸ்வரன் சந்திரகலா ஆகியோரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் செங்கலடி பிரதேச சபை உறுப்பினருமான செ. நிலாந்தன், ஏறாவூர் நகர சபை உறுப்பினர் ரகுவரன், சமூக செயற்பாட்டாளர் சர்மிளா உதயகுமார், மோகனராஜன், குமாரசிங்கம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# திருக்கோவில் விபத்தில் உயிரிழந்த பொலிஸின் நினைவாக இரத்ததானம்!





அம்பாறை, திருக்கோவில் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் உயிரிழந்த நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸின் முதலாம் மாத நினைவாக இரத்த தான முகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றிய அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் ஜதர்சன் என்பவர் விடுமுறையில் சென்ற நிலையில் அங்கு இடம்பெற்ற வீதி விபத்தில் கடந்த மாதம் உயிரிழந்திருந்தார்.

அவரின் முதலாம் மாத நினைவாக நெல்லியடி பொலிஸ் புலனாய்வுத் துறை மற்றும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்த இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

# மாளிகைக்காடு மையவாடி கடலரிப்பில் வெளிவந்திருந்த மனித எச்சங்கள் மீட்பு!

## பயனற்றுப் போகும் தற்காலிக தீர்வுகள்





**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபைக்கு உட்பட்ட மாளிகைக் காடு அந்நூர் ஜு/ம்மா பள்ளிவாசலுக்கு முன்பாக உள்ள மையவாடி அண்மை யில் ஏற்பட்ட டித்வா புயல் மற்றும் தற்போது ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தால் ஏற்பட்டுள்ள கடும் காற்றுடன் கூடிய கடும் கடற்கொந்த ளிப்பு போன்ற காரணங்களால் பாரிய கடலரிப்புக்கு உள்ளாகி வருகின்றது.

இதனால் இம்மையவாடியில் மாளி கைக்காடு மற்றும் சாய்ந்தமருது மக்க ளின் ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய் யப்பட்டுள்ள நிலையில் தொடர்ச்சியான கடலரிப்பு காரணமாக மனித எச்சங்கள் தொடர்ச்சியாக வெளிப்பட ஆரம்பித் துள்ளன. இது தொடர்பான தகவல்கள் மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர் போன்ற அதி காரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அரசமைப்புப் பேரவை யின் உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையேர பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா வின் ஆலோசனைக்கு அமைய உட னடியாக கொட்டும் மழைக்கு மத்தியி லும் சம்பவ இடத்துக்கு வருகை தந்த தேசிய மக்கள் சக்தியின் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ. பர்ஹான் இடைவிடாது 4 நாள்களாக கனரக வாக னங்களின் உதவியுடன் கல் அணைகளை தற்காலிகமாக அமைத்துக் கொடுத் துள்ளார்.

கடந்த காலங்களில் இந்த மையவாடி இவ்வாறு கடலரிப்புக்கு உள்ளான போதிலும் நிரந்தரத் தீர்வு எதுவும் மேற் கொள்ள முடியாதமையினால் தற்போது இவ்வாறான நிலைமை தோன்றி உள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் ஏற்படுத்தப்பட்ட தற்காலிக தடுப்பு அணைகளையும் தாண்டி கடலரிப்பு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூழலில் பல எலும்புக்கூடு பகுதிகள் கபூர் தடயங்கள் மற்றும் மனித எச்சங்களாக கருதப்படும் பொருள்கள் கரையோரத்தில் காணப்படுகின்றன.

மையவாடிக்கு அண்மையில் உள்ள விநாயகர் ஆலயம், காரைதீவு கரை யோர பாதுகாப்பு அலுவலகம் போன்றன கடலரிப்புக்கு இலக்காகி உள்ளன.

இது விடயம் தொடர்பில் அரச அதி காரிகள் விரைந்து செயற்பட்டு இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக் கின்றனர்.

இதே வேளை மீனவர்களின் மீன் பிடி படகுகளும் வள்ளங்களும் நிறுத்த இடமின்றி வீதிக்கு அருகில் இழுத்து வைக்கப்பட்டுள்ளன.

கொங்கிரீட் வீதிகளும் கடலரிப்பில் உடைந்து கடலுக்குள் இழுத்துச் செல்லப் பட்டுள்ளன. அம்பாறை மாவட்ட கரை யோர பிரதேசங்கள் முற்றாக கடலரிப் புக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# முல்லைத்தீவில் தகவல் தொழில்நுட்ப விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறை





**(த.சுபேசன்)**

கிறிசலிஸ் நிறுவனத்தின் கண்காணிப் பின் கீழ் செயற்படும் முல்லைத்தீவு மாவட்ட குடிசார் அமைப்புக்களின் சம் மேளனப்பிரதிநிதிகளுக்குதகவல்தொழில் நுட்பம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சிப்பட்டறை சனிக் கிழமை முல்லைத்தீவு எஸ்.எல். ஆர்.சி. மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது பெண்கள், இளைஞர் தலைவர்கள், உள்ளூராட்சி மன்ற பெண் உறுப்பினர்கள் மற்றும் குடிசார் அமைப் புக்களின் சம்மேளன பிரதிநிதிகள் என 75 பேர் கலந்து கொண்டு இணையப் பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண் அறிவுக் கருவிகளின் பயன்பாடு உள்ளிட்ட தெளிவுகளைப் பெற்றிருந்தனர்.

மேற்படி கருத்தமர்வில் வளவாளர் களாக ஏற்கனவே கிறிசலிஸ் நிறுவனத் தினால் மூன்று தினங்கள் நடத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப பயிற்சிநெறி யில் பயிற்றப்பட்ட முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயிற்றுநர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# டில்லியிலுள்ள சி.பி.ஐ அலுவலகத்தில் இன்று விசாரணைக்கு ஆஜரானார் விஜய்

த.வெ.க. தலைவர் விஜய் கரூர் கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பான விசாரணைக்காக டில்லியிலுள்ள சி.பி.ஐ அலுவலகத்தில் இன்று முன்னிலையானார்.

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு டில்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் ஆஜராகும் படி தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய்க்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

அதன்படி, இன்று காலை 11 மணி அளவில் சி.பி.ஐ. அலுவலகத்தில் முன்னிலையாவதற்காக தனி விமானம் மூலம் டில்லிக்கு புறப்பட்டு சென்றார்.

த.வெ.க. தலைவர் விஜய்க்கு உரிய பாதுகாப்பு வழங்கக்கோரி டில்லி பொலிஸிடம் அக்கட்சி தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அக்கோரிக்கையை ஏற்ற டில்லி பொலிஸ் விஜய்க்கு முழு பாதுகாப்பு வழங்கப்படும் என உறுதி அளித்திருந்தது.

இந்த விசாரணை 3 நாள்கள் நீடிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. இந்த வழக்கு தொடர்பாக, கட்சியின் பொதுச் செயலாளர் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, சிடிஆர். நிர்மல் குமார் உள்ளிட்ட நிர்வாகிகளிடம் ஏற்கெனவே சுமார் 20 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, பிரச்சாரத் துக்கு விஜய் பயன்படுத்திய சிறப்பு பஸ் கரூரில் சி.பி.ஐ. மற்றும் மத்திய தடய அறிவியல் ஆய்வக நிபுணர்கள் கடந்த 10 ஆம் திகதி ஆய்வு செய்தனர்.

அந்தபஸ்ஸில்பொருத்தப்பட்டுள்ள அதிநவீன சி.சி.டி.வி. கமராக்கள் மற்றும் அதில் பதிவான காட்சிகள் குறித்து பஸ் சாரதியிடம் விசாரணை நடத்தப்பட்டது.



# சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் கடும் குளிர் காரணமாக மக்கள் பாதிப்பு

சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில் நிலவும் கடும் குளிரால் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். இயல்புக்கு மாறான வானிலை காரணமாக கடும் குளிர் நிலவுவதாக இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக சென்னை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட வட மாவட்டங்களில் கடும் குளிர் நிலவி வருகிறது. பொதுமக்கள் குளிரை தாங்கும் உடைகளுடன் காலை, மாலை வேளைகளில் வலம் வருகின்றனர்.

விடுமுறை தினத்தில்கூட குழந்தைகள் அதிகம் வெளியில் விளையாடுவதை பார்க்க முடியவில்லை. சென்னை, புறநகர் பகுதிகள் ஊட்டி, கொடைக்கானல் போன்று மாறியது என்று தமிழக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதுபோன்ற கடும் குளிர் நிலவுவதற்கான காரணம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல தலைவர் பி.அமுதா தெரிவிக்கையில்,


"கடந்த 1891 முதல் 2026 வரை ஜனவரி மாதத்தில் 21 முறை தான் காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள் உருவாகியுள்ளன.

இந்த ஆண்டு ஜனவரியில் இலங்கை அருகே காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுப்பெற்றது. இது வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக மன்னார் வளைகுடா அருகே நீடித்து வருகிறது. ஏற்கெனவே வட மாநிலங்களில் குளிர் அலையின் தாக்கம் உள்ளது.

மேலும், வளிமண்டல மேலடுக்குகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தின் தாக்கம் காரணமாக, வட மாநிலத்தில் நிலவும் குளிர் காற்று ஈர்க்கப்பட்டு வட தமிழகம் நோக்கி வருகிறது.

தெற்கு திசையில் இருந்தும் குளிர் காற்று வட தமிழகம் நோக்கி வருகிறது. கடந்த 4 நாள்களுக்கு மேலாக சூரிய ஒளியே வராத நிலையில், நிலத்திலிருந்து வெளியேறும் வெப்பம் தடைபட்டு, பூமியும் குளிர்ச்சி அடைந்துள்ளது.

ரஷ்யா வழியாக சைபீரிய குளிர் அலையின் தாக்கமும் தமிழகம் நோக்கி வருகிறது. இதுபோன்ற பல வேறு காரணங்களால் சென்னை உள்ளிட்ட வட தமிழக பகுதிகளில் குளிர் அதிகரித்துள்ளது. இது இயல்புக்கு மாறான வானிலையால்தான் ஏற்பட்டுள்ளது." என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஈரான் போராட்டத்தில் 500 பேர் உயிரிழப்பு; அமெரிக்கா, இஸ்ரேலுக்கு கடும் எச்சரிக்கை

ஈரானில் கடந்த இரண்டு வாரங்களாக நீடித்து வரும் மக்கள் எழுச்சியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500 ஐ கடந்துள்ளதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

அதேவேளை, அமெரிக்கா தலையிட்டால் இஸ்ரேல் மற்றும் அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் பகிரங்கமாக எச்சரித்துள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட HRANA அமைப்பு வெளியிட்டுள்ள தரவுகளின்படி, 490 போராட்டக்காரர்கள் மற்றும் 48 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன், 10,600 இற்கும் அதிகமானோர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டங்களைத் தடுக்க வியாழக்கிழமை முதல் ஈரான் முழுவதும் இணையச் சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனைச் சரிசெய்ய ஈலோன் மாஸ்க்கின் 'ஸ்டார்லிங்க்' சேவையைப் பயன்படுத்துவது குறித்து ஆலோசிப்பதாக ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரானியப் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக இராணுவத் தாக்குதல், கூடுதல் தடைகள் உள்ளிட்ட கடுமையான தெரிவுகள் பரிசீலனையில் உள்ளன என தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப், "அமெரிக்கா தவறுதலாகத் தாக்கினால், இஸ்ரேல் மற்றும் பிராந்தியத்தில் உள்ள அனைத்து அமெரிக்கக் கப்பல்களும் தளங்களும் எமது இலக்குகளாக மாறும்." என எச்சரித்துள்ளார்.

டிசம்பர் 28 அன்று விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொடங்கிய போராட்டம், தற்போது 1979 இஸ்லாமியப் புரட்சிக்குப் பிந்தைய ஆட்சிக்கு எதிரான எழுச்சியாக மாறியுள்ளது.

ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியான், இந்த வன்முறைகளுக்குப் பின்னால் அமெரிக்காவும் இஸ்ரேலும் இருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், திங்கட்கிழமை நாடு தழுவிய கண்டனப் பேரணிக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் சீயோனிச ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் கொல்லப்பட்ட தியாகிகளுக்காக மூன்று நாள்கள் தேசிய துக்க தினம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், வன்முறைச் செய்திகளால் தான் அதிர்ச்சியடைந்துள்ளதாகக் கூறியதுடன், அமைதியாகப் போராடும் உரிமையை மதிக்குமாறு ஈரானைக் கேட்டுக்கொண்டார்.


2025 ஜூன் மாதம் ஈரானுடன் 12 நாள்கள் போர் புரிந்த இஸ்ரேல், தற்போது அமெரிக்காவின் தலையீடு இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் தனது படைகளை அதீத தயார் நிலையில் வைத்துள்ளது.

வெளிநாடுகளில் தங்கியுள்ள ஈரானிய எதிர்க்கட்சித் தலைவர்கள், மக்கள் வீதிக்கு வந்து தொடர்ந்து போராடுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

ஈரானிய உயரதிகாரிகள் இன்னும் ஒற்றுமையாக இருப்பதால், இந்தப் போராட்டங்களால் தற்போதைய ஆட்சி கவிழுமா என்பது குறித்து அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.








# அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்யுமாறு கியூபாவை வலியுறுத்துகின்றார் ட்ரம்ப்

அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு கியூபாவை, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இல்லையேல், வெனிசுவேலாவில் இருந்து கியூபாவிற்கு செல்லும் எண்ணெய் மற்றும் நிதி விநியோகத்தை நிறுத்தப்போவதாகவும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

எனவே மிகவும் தாமதமாகும் முன்பே அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு கியூபாவை அவர் வலியுறுத்தியுள்ளார்.

கியூபா தனது அன்றாட எண்ணெய் தேவையில் சுமார் 50 சதவீதத்திற்கு வெனிசுவேலாவையே நம்பியுள்ளது.

ஆனால், மதுரோவின் வீழ்ச்சிக்குப் பிறகு, கியூபாவிற்கு இனி பூச்சியம் அளவிலேயே எண்ணெய் மற்றும் பணம் செல்லும் என்று ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

"கியூபா பல ஆண்டுகளாக வெனிசுவேலாவின் எண்ணெய் மற்றும் பணத்தில் வாழ்ந்து வந்தது. அதற்குப் பதிலாக கியூபா அங்குள்ள சர்வாதிகாரிகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கியது. ஆனால் இனி அது நடக்காது." என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், வெனிசுவேலாவில் கடந்த வாரம் நடந்த அமெரிக்கத் தாக்குதலில், மதுரோவிற்கு பாதுகாப்பு வழங்கிய 32 கியூப வீரர்கள் கொல்லப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார்.

வெனிசுவேலாவிற்கு இனி கியூபாவின் பாதுகாப்புத் தேவை இல்லை என்றும், உலகின் வலிமையான அமெரிக்க இராணுவம் இனி வெனிசுவேலாவைப் பாதுகாக்கும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சரும், கியூப வம்சாவளியைச் சேர்ந்தவருமான மார்கோ ரூபியோ, கியூபாவின் அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடும் என்ற சமூக வலைத்தளப் பதிவை ட்ரம்ப் பகிர்ந்து, அது நன்றாகத்தான் இருக்கும் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

இது கியூப அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கியூப வெளியுறவுத்துறை அமைச்சர் புருனோ ரோட்ரிக்ஸ், அமெரிக்காவின் இந்தச் செயலை ஒரு சர்வதேச குற்றவியல் நடவடிக்கை என்று விமர்சித்துள்ளார்.

மேலும், கொல்லப்பட்ட கியூப வீரர்களை மாவீரர்கள் என்று கியூப அரசு கௌரவித்துள்ளது.




# அலெப்போ நகரை முழுமையாக கைப்பற்றியது சிரிய இராணுவம்

சிரியாவின் அலெப்போ நகரிலிருந்து குர்திஷ் தலைமையிலான சிரிய ஜனநாயகப் படைகள் முழுமையாக வெளியேறியுள்ளன என அந்த மாகாண ஆளுநர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக அலெப்போ நகரின் கட்டுப்பாட்டைக் கைப்பற்றுவதில் சிரிய அரசுப் படைகளுக்கும், குர்திஷ் படைகளுக்கும் இடையே கடும் மோதல் நிலவி வந்தது.

இந்நிலையில், குர்திஷ் மக்கள் அதிகம் வசிக்கும் ஷேக் மக்ஸூத் சுற்றுப்புறப் பகுதியைச் சிரிய இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததைத் தொடர்ந்து இந்த வெளியேற்றம் நிகழ்ந்துள்ளது.

சிரிய அரசுப் படைகளின் ஒருங்கிணைப்புடன், எஞ்சியிருந்த குர்திஷ் போராளிகள் அனைவரும் பஸ் மூலம் அலெப்போ நகரிலிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

நேற்று இரவு முழுவதும் இந்த வெளியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரியாவின் மிக முக்கியமான நகரங்களில் ஒன்றான அலெப்போவிலிருந்து குர்திஷ் படைகள் வெளியேறியிருப்பது, அந்தப் பகுதியில் சிரியாவின் மத்திய அரசு தனது பிடியை மேலும் வலுப்படுத்தியுள்ளதைக் காட்டுகிறது. பல ஆண்டுகளாக நிலவி வந்த உள்நாட்டுப் போர்ச் சூழலில், இது ஒரு முக்கிய மாற்றமாகக் கருதப்படுகிறது.

கனடா முரசு

திங்கட்கிழமை | 12/01/2026

## கனடாவில் விடுமுறைக் காலத்தில் காய்ச்சல் பரவல் உச்சத்தை எட்டியது

கனடாவில் விடுமுறை காலத்தில் காய்ச்சல் (இன்ஃப்ளுயன்சா) பரவல் உச்சத்தை எட்டியுள்ளதாக என தெரிவிக்கப்படுகிறது.

தேசிய தரவுகளின்படி, புதிய தொற்று 02▶



# வெனிசுவேலாவில் ஜனநாயக மாற்றம் கோரி ஒட்டாவாவில் அமைதி பேரணி முன்னெடுப்பு

கனடாவின் ஒட்டாவாவில் வசித்து வரும் வெனிசுவேலா குடிமக்கள், தங்களது தாய்நாட்டில் ஜனநாயக மாற்றம் ஏற்பட வேண்டும் எனக் கோரி, அமைதிப் பேரணியை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த வாரம் அமெரிக்கா வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலாஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி சிலியா ஃப்ளோரெஸ் ஆகியோரை கைது செய்ததைத் தொடர்ந்து இந்த பேரணி நடத்தப்பட்டுள்ளது.

ஒட்டாவா - கேட்டினோ வெனிசுவேலா டயாஸ்போரா அமைப்பு இந்த பேரணியை ஏற்பாடு செய்திருந்தது. 02▶




















# கனடாவில் ஒரே நாளில் நடந்த இரு கொலைகள் கிரெஸ்டன் நகரைச் சேர்ந்தவருக்கு ஆயுள் தண்டனை

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம், கிரெஸ்டன் நகரைச் சேர்ந்த மிட்செல் மெக்இன்டையர் என்பவருக்கு, ஒரே நாளில் நடந்த இரண்டு கொலைகள் தொடர்பில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு மரணங்களும் ஆரம்பத்தில் இயற்கை காரணங்களால் ஏற்பட்டவை எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2022 பெப்ரவரி 6 ஆம் திகதி கிரெஸ்டனில் உள்ள ஒரு வீட்டில் ஜூலியா ஹவ் என்பவர் தலையில் சுடப்பட்ட நிலையில் உயிரிழந்த சம்பவத்தில், இரண்டாம் நிலை கொலை குற்றத்திற்காக மெக்இன்டையருக்கு 13 ஆண்டுகள் பிணை இன்றி ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

அதே நாளில், கிரெஸ்டனிலிருந்து சுமார் 133 கிலோ மீற்றர் வடகிழக்கே உள்ள கிம்பர்லி நகரில், டேவிட் கிரீமர் என்பவர் அவரது வீட்டில் உயிரிழந்த நிலையில்.கண்டெடுக்கப்பட்டார்.

இந்த சம்பவத்தில் மனிதபடுகொலை குற்றத்திற்காக மெக்இன்டையருக்கு 8 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, அது ஆயுள் தண்டனையுடன் இணைந்து அனுபவிக்கப்படும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்ற ஆவணங்களின்படி, இரு சம்பவங்களிலும் முதலில் மரண விசாரணை அதிகாரிகள் விழுந்து ஏற்பட்ட விபத்துகள் எனக் கருதி, சந்தேகமில்லாத மரணங்களாக பதிவு செய்தனர்.

ஜூலியா ஹவ் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தமை, மரணத்திற்கு இரண்டு நாள்கள் பின்னர் நடத்தப்பட்ட உடற்கூறு ஆய்வில் மட்டுமே தெரியவந்தது.

டேவிட் கிரீமரின் மரணம் விபத்து எனத் தீர்மானிக்கப்பட்டதால், அவரது உடல் தகனம் செய்யப்பட்டு, அந்த வழக்கில் எந்தவிதமான குற்றவியல் ஆதாரங்களும் சேகரிக்கப்படாத நிலை ஏற்பட்டதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.


## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை இன்னும் அதிகமாகவே உள்ளபோதிலும், புதிய ஆண்டின் தொடக்கத்தில் அது நிலைபெற்றுள்ளதாகக் காணப்படுகிறது.

கடந்த வெள்ளிக் கிழமை வெளியிடப்பட்ட சமீபத்திய தேசிய இன்ஃப்ளுயன்சா தரவுகள் டிசம்பர் 14 முதல் ஜனவரி 3 வரையிலான காலத்தை உள்ளடக்கியவை.

விடுமுறை காலத்திற்கு முன்னதாக இன்ஃப்ளுயன்சா 'ஏ' வகை தொற்றுகள் திடீரெனவும் விரைவாகவும் அதிகரித்து, மருத்துவமனைகளில் கடும் அழுத்தத்தை ஏற்படுத்தியது.



இதன் காரணமாக ஒட்டாவா மற்றும் கிழக்கு ஒன்டாரியோ பகுதிகளில் மூன்று குழந்தைகள் உயிரிழந்தன என தெரிவிக்கப்பட்டது.

நத்தார் வாரத்தில், கடந்த மூன்று பருவங்களில் இல்லாத அளவுக்கு அதிகமாக, சோதனைகளில் 33 சதவீதம் இன்ஃப்ளுயன்சா நேர்மறை முடிவுகள் பதிவாகியுள்ளன என மத்திய சுகாதார நிறுவனம் தெரிவித்தது.

டிசம்பர் 21 வாரத்தில் மாகாணம் உச்சத்தை எட்டியதாகவும், அதன் பின்னர் சுமார் 10 சதவீதம் அளவுக்கு குறிப்பிடத்தக்க குறைவு பதிவாகியுள்ளதாகவும் ஒன்டாரியோ பொது சுகாதாரத் துறையின் தொற்றுநோய் கட்டுப்பாட்டு பிரிவைச் சேர்ந்த மருத்துவர் அட்ரினா சோங் தெரிவித்தார்.

இருப்பினும், தற்போது இன்னும் பெருமளவு காய்ச்சல் பரவல் தொடர்வதாகவும் அவர் கூறினார்.

கடந்த மாதத்தில், சில வாரங்களுக்கு முன்பே பருவம் உச்சத்தை எட்டியிருந்தாலும், இன்னும் பல வாரங்கள் இந்த காய்ச்சல் பருவம் நீடிக்கும் என அவர் எச்சரித்தார்.

## வெனிசுவேலாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும், அரசியல் அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், மேலும் அமைதியான முறையில் ஜனநாயகத்திற்கு மாற்றம் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஒட்டாவாவின் எல்கின் தெருவில் அமைந்துள்ள மனித உரிமைகள் நினைவுச் சின்னம் அருகே நடைபெற்ற இந்த பேரணியில், வெனிசுவேலா கொடிகளை ஏந்தியவாறு பலர் பதாகைகளுடன் பங்கேற்றனர்.

“United for Venezuela” என்ற முழக்கத்துடன் நடைபெற்ற இந்த பேரணியில், சர்வதேச சமூகத்தின் கவனம் வெனிசுவேலாவின் நிலைமைகளின் மீது திருப்பப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.



# குழந்தைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கடுங்குளிரிலும் 24 மணி நேரம் ஓடிய கனடியர்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தைச் சேர்ந்த மெறிட் நகரில், கடந்த மாதம் கொல்லப்பட்ட ஒரு பெண்ணின் குழந்தைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், அந்நகரைச் சேர்ந்த ஒருவர் கடுமையான குளிர் சூழலில் 24 மணி நேர தொடர் ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

மார்க் நெண்டிக் என்பவர், கடந்த சனிக்கிழமை காலை 8 மணிக்கு தொடங்கிய இந்த ஓட்டத்தை, ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு துல்லியமாக 24 மணி நேரத்திற்குப் பிறகு நிறைவு செய்தார்.

இந்த காலகட்டத்தில் அவர் மெறிட் நகரின் ஓட்டப்பாதையை 402 முறை சுற்றி, மொத்தமாக 156 கிலோ மீற்றர் தூரம் ஓடியுள்ளார். இடையில் அவர் மிகவும் குறுகிய இடைவெளிகளையே எடுத்துக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூகமே ஒன்றாகச் சேர்ந்த விதம் அற்புதமாக இருந்தது என ஓட்டத்தை முடித்த பின் நெண்டிக் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின் மூலம், கடந்த டிசம்பர் 16 அன்று உயிரிழந்த பாமேலா ஜார்விஸ் (வயது 45) என்பவரின் ஆறு குழந்தைகளுக்காக 3,000 டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பாக, அவரது கணவர் கிறிஸ்டோபர் ஜார்விஸ் மீது இரண்டாம் நிலை கொலை குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நெண்டிக்கின் மனைவி பாமேலா ஜார்விஸை அறிந்தவர் என்றும், தனது குழந்தைகள் ஜார்விஸின் சில குழந்தைகளுடன் பள்ளியில் படித்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

“அவர் மிகவும் நல்ல மனம் கொண்டவர். எவருக்கும் உதவ தயாராக இருப்பவர். இப்படியான முடிவை அவர் பெறத் தகுதியற்றவர்,” என நெண்டிக் உருக்கத்துடன் தெரிவித்தார்.

48 வயதை எட்டிய நெண்டிக், ஒரு அல்ட்ரா-எண்ட்யூரன்ஸ் விளையாட்டு வீரர் ஆவார்.

ஜார்விஸின் துயரமான மரணத்திற்கு பின், அவரது குழந்தைகளுக்கு உதவ ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணமே இந்த ஓட்டத்திற்கு தூண்டுகோலாக இருந்ததாக அவர் கூறினார்.

# கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் குடும்ப மருத்துவர்களுக்கு தட்டுப்பாடு

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் குடும்ப மருத்துவர்கள் பற்றாக்குறை மீண்டும் தீவிரமடைந்துள்ளதாக ஒன்டாரியோ மருத்துவ சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது ஒன்டாரியோவில் 25 லட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு குடும்ப மருத்துவர் இல்லை. இந்த எண்ணிக்கை எதிர்வரும் காலத்தில் 44 லட்சம் வரை அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஓய்வு பெறத் திட்டமிடும் குடும்ப மருத்துவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அதே சமயம், குடும்ப மருத்துவத்துறைக்கு புதிய மருத்துவர்கள் போதுமான அளவில் வரவில்லை. குடும்ப மருத்துவர்கள் குறைவாக இருப்பது அவசர சிகிச்சை பிரிவுகளில் காத்திருக்கும் நேரம் அதிகரிக்கவும், நோய்கள் தீவிரமடையவும் காரணமாகும் என தெரிவிக்கப்படுகின்றது.



அவசர சிகிச்சை பிரிவுகள் தான் சுகாதார அமைப்புக்கான முதன்மை நுழைவாயிலாக மாறுகின்றன.

இதனால் நீண்டகால நோய்கள் சிகிச்சையின்றி போகின்றன; தவிர்க்கக்கூடிய சிக்கல்கள் அதிகரிப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

இதனால் சுகாதார அமைப்பும், அவசர சிகிச்சை பிரிவுகளும் கடும் அழுத்தத்தை சந்திப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நிலையை சமாளிக்க, நகராட்சிகள் மற்றும் மருத்துவமனைகள் மருத்துவர்களை தங்கள் பகுதிகளில் பணியமர்த்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.